விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
வரி மேலே

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 105 வள்ளுவர் ஆண்டு 2054 பங்குனி 20 திங்கட்கிழமை (03.04.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## பிரதமர் மோடியைச் சந்திக்க
# ஜனாதிபதி ரணில் இந்தியா பயணம்

(கொழும்பு) மாகாண சபைத் தேர்தலுக்கான திகதி மற்றும் 13ஆம் திருத்தச் சட்டத்தினை முழுமையாக அமுல்படுத்துவதற்கான திட்டங்களுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இம்மாதம் 5ஆம் திகதி அல்லது 6ஆம் திகதி இந்தியாவுக்கு பயணமாகவுள்ளதாக ஐ.தே.கவின் ஊடகப் பிரிவு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (11ஆம் பக்கம் பார்க்க)

### சட்டவிரோத மீன்பிடி
## பருத்தித்துறையில் இன்று போராட்டம்

(யாழ்ப்பாணம்)
சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று 3ஆம் 02

## வெடுக்குநாறி மலையில் படையினர் குவிப்பு

(வவுனியா)
வவுனியா வெடுக்குநாறி மலையில் நேற்றைய தினம் சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்படவிருந்த நிலையில் அங்கு சென்ற அமைச்சர்கள் பிரதிஷ்டை செய்ய முடியாது எனத் 11

## கிளிநொச்சியில் மினி சூறாவளி

(கிளிநொச்சி)
கிளிநொச்சியில் நேற்று பிற்பகல் ஏற்பட்ட மினி சூறாவளி காரணமாக பாடசாலை உள்ளிட்ட பொதுச் சொத்துக்கள் சேதமடைந்துள்ளதுடன் போக்குவரத்துகளும் பாதிப்படைந்துள்ளன.
கிளிநொச்சி மகா வித்தியாலய வளா 11

## பளையில் ஆணின் சடலம் மீட்பு

(பளை)
பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பெரியபளைப்பகுதியில் சடலம் ஒன்று இனங் காணப்பட் 11

### வெடுக்குநாறி மலையில்
# விக்கிரகப் பிரதிஷ்டையை தடுத்த தமிழ் அமைச்சர்கள்
### திட்டமிட்டு தங்களை ஏமாற்றியதாக பக்தர்கள் வேதனை

(வவுனியா)
வவுனியா வெடுக்குநாறி மலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை சிவலிங்கம் பிரதிஷ்டை செய்வதற்கென அங்கு சென்ற தமிழ் அமைச்சர்கள் திடீரென பல்டி அடித்ததால் லிங்கத்தைப் பிரதிஷ்டை செய்ய முடியாமல் ஆலய அறங்காவலர்களும் அடியார்களும் பலத்த ஏமாற்றமடைந்தனர். (11ஆம் பக்கம் பார்க்க)



## துப்பாக்கி முனையில் அச்சுறுத்தி புத்தர் சிலை வைக்க முயற்சி
### தமிழர் பகுதியில் தொடரும் அவலம்

(திருகோணமலை)
திருகோணமலை, குச்சவெளி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பொன்மாலைக்குடா பகுதியில் பௌத்த மத குருவால் சிறுபான்மை இன மக்களின் காணிக்குள் அத்துமீறி அடாத்தாக புத்தர் சிலை வைக்க முற் 11

## கைதடி சித்த மருத்துவ அலகு சித்த மருத்துவ பீடமாக தரமுயர்வு

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் கைதடியில் அமைந்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சித்த வைத்திய அலகு மற்றும் திருகோணமலையில் அமைந்துள்ள கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சித்த வைத்திய அலகு ஆகியவற்றை சித்த வைத்திய பீடங்களாகத் தரமுயர்த்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.
கடந்த மாதம் 11

### அனுமதியின்றி நடத்தப்பட்ட சிறுவர் இல்லம்
## கட்டாய மதமாற்றத்துக்கு உட்படுத்தப்பட்ட 13 சிறுமிகள்
### விசாரணையில் திடுக்கிடும் தகவல்கள்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் இருபாலையில் கிறிஸ்தவ சபை ஒன்றினால் அனுமதியின்றி நடத்தப்பட்ட சிறுவர் இல்லம் முற்றுகையிடப்பட்டு, மீட்கப்பட்ட 13 சிறுமிகளும் துன்புறுத்தப்பட்டுள்ளனர் என்று விசாரணையில் தெரிய வந்துள்ளது. 11

## இச்சந்தர்ப்பத்தை தவறவிட்டால் எக்காலத்திலும் தீர்வு கிடைக்காது
### பிரதமர் தினேஸ் குணவர்த்தன



(கொழும்பு)
அரசியல், பொருளாதாரம் என நாட்டிலுள்ள அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வைப் பெற்றுத்தரக்கூடிய ஒரே தலைவராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திகழ்கின்றார் என பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார். 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலைவாய்ப்பு

யாழ். நகரில் ஸ்ரான்லி வீதியில் இயங்கும் ஹாட்வெயார் கடைக்கு வேலையாட்கள் தேவை.

தொடர்பு

**074 226 2271**

(15139)

## பருத்தித்துறை...

திகதி யாழ்.பருத்தித்துறையில் போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளதாக மீனவர் சங்க பிரதிநிதிகள் அறிவித்துள்ளனர்.

பருத்தித்துறை துறைமுகத்தில் இருந்து பருத்தித்துறை பிரதேச செயலகம் வரை இந்த போராட்டம் இடம் பெறவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

நேற்றையதினம் யாழ்ப்பாணம் - பாசையூரில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது, யாழ் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளன முன்னாள் தலைவர் அன்னலிங்கம் அன்னராசா இவ்வாறு அறிவித்துள்ளார். (4.7)

## பெங்களூர் வெற்றி



மும்பை - 171/7 (20)
பெங்களூர் - 172/2
ஆட்டநாயகன்
டு பிளஸிஸ்

## விசா சம்பந்தமான ஆலோசனைகள்

ஐரோப்பிய நாடுகளுக்கான Student visa, work visa/ Visit visa/ Permanent Resident visa தேவைப்படுபவர்கள் எங்களிடம் தொடர்பு கொள்ளவும்.

Hybrid International Hub (pvt) Ltd Jaffna.

(C-6282)

**076 250 0098/ 021 222 1265**

## லொத்தர் சீட்டு விற்பனையாளர்கள் தேவை

துவிச்சக்கர வண்டிகள், லொத்தர் கூடுகள், நடந்து விற்பனை செய்வதற்கும் விற்பனையாளர்கள் தேவை. 40 வயதிற்கு மேற்பட்டவர்கள் விரும்பத்தக்கது. கண்ணியமான சம்பளம் வழங்கப்படும் விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்.

**077 603 1723**

(15128)

நேரில் இல.04 கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
யாழ் முகவர்கள் கனகலிங்கம் திலகவதி

## பேக்கரி வேலை

நன்கு அனுபவமுள்ள பேக்கரி பாஸ் தேவை.

**புதிய துர்க்கா வெதுப்பகம்**
கலட்டி முந்தல் வீதி.
பொற்பதி றோட்,
கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.

(15127)

**077 622 8868**

## வெளிநாடு செல்வது பற்றி சிந்திக்கின்றீர்களா? இலவச பயிற்சி பட்டறையில் இணைந்து கொள்ளுங்கள்

மேற்படிப்புக்காக அல்லது வேலைவாய்ப்பினை பெற்றுக்கொண்டு வெளிநாட்டிற்கு செல்வதற்கு சிந்திக்கின்றீர்களா? (Student visa / work visa ) இதனை எவ்வாறு செயற்படுத்துவது? யார் மூலமாக நடைமுறைப்படுத்தலாம் என்று குழப்பமாக இருக்கின்றதா? கவலையை விடுங்கள் உங்கள் அனைத்துவிதமான சந்தேகங்களுக்கும் தீர்வைப்பெற Hybrid International Hub (pvt) Ltd இனால் அனுபவம் வாய்ந்த விரிவுரையாளர்களால் பயிற்சிப்பட்டறை எதிர்வரும் 08.04.2023 (சனிக்கிழமை) காலை 9.30 தொடக்கம் 12.30 வரை அலுவலக கேட்போர் கூடத்தில் நடாத்தப்படவுள்ளது.

பங்குபற்றி பயன் பெறவிரும்புவோர் தங்களது வரவினை கீழ்வரும் தொலைபேசிக்கூடாக எதிர்வரும் 05.04.2023 புதன்கிழமைக்கு முன்னர் பதிவுசெய்து உறுதிப்படுத்திகொள்ளவும்.

பெற்றோர்கள், மாணவர்கள் ஆர்வமுள்ள அனைவரும் பங்குபற்றி பயன் பெறுங்கள்.

(C-6281)

**Hybrid International Hub (pvt) Ltd**
**No. 36, VaithilingamThuraisamy Road**
**Tp: No - 021 222 1265 / 076 250 0098**

## கிளி/ கிளிநொச்சி மத்திய கல்லூரி

### பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

காலம் :- 16.04.2023
நேரம் :- காலை 9.30 மணி
இடம் :- கல்லூரி கேட்போர்கூடம்

**நிகழ்ச்சி நிரல்**

- அமைதி வணக்கம்
- வரவேற்புரை
- தலைமையுரை
- செயலாளர் அறிக்கை
- பொருளாளர் அறிக்கை
- சபையோர் கருத்துக்கள்
- புதிய நிர்வாகத் தெரிவு
- நன்றி உரை

தகவல் : செயலாளர்,
பழைய மாணவர் சங்கம்
கிளி/ கிளிநொச்சி மத்திய கல்லூரி

(C-6280)

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் சாவகச்சேரிப் பகுதியில் 8 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

**நிலப்பரப்பு**

- சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன்.
- A9 பிரதான வீதியிலிருந்து 700m தூரம்.
- காய்க்கும் தென்னைகள் 48 உள்ளன.
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன் உள்ளது.
- ஒரு பரப்பின் விலை 19 லட்சம் முதல் 15 லட்சம் வரை

**பார்வையிடும் நேரம் :**
காலை 06 மணி முதல் மாலை 06 மணிவரை

**தரகர் தேவையில்லை**

தொடர்புகளுக்கு :- ஜெயம்

(15130)

**077 814 7389, 077 986 5457**

## மரண அறிவித்தல்

### சிவக்கொழுந்து கரிகரன்

### (பணியாளர் - சுபாஸ் பேக்கரி)



பெரியதம்பிரான் கோவில் வீதி, இமையாணன் மேற்கு, உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சிவக்கொழுந்து கரிகரன் அவர்கள் நேற்று (02.04.2023) ஞாயிற்றுக் கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிவக்கொழுந்து மற்றும் சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும் சுதாகரன் (இ.போ.ச. பருத்தித்துறை), சந்திரிக்கா, சிவாஜிகா (பிரதேச செயலகம் - கரவெட்டி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் உஷா, தங்கரூபன் (மாவட்ட சித்த ஆயுள்வேத வைத்திய சாலை, அச்சுவேலி), நகுலன் (சிறிலங்கா ரெலிகொம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் கிங்சிகா, லிபிகரன் ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் லதுஷிகா, தட்சயன், வர்சன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.04.2023) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக காலை 10 மணியளவில் வல்லை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C-6283)

பெரியதம்பிரான் கோவில் வீதி,
இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி.

தகவல் - குடும்பத்தினர்
தொடர்பு - 077 597 5380

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் அச்செழு பகுதியில் 20 பரப்பு காணி விற்பனைக்குண்டு**

**நிலப்பரப்பு**

- அச்செழு வடக்கு நீர்வேலி வல்லியப்பர் சிவன்கோயிலுக்கு அருகாமையில் உள்ளது.
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்.
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி
- நன்னீர் ஊற்று (குழாய்க் கிணறு உள்ளது)
- 1 பரப்பின் விலை
  காப்பெற் வீதியை பிரதான முகப்பாகக் கொண்ட காணிகள் 15 இலட்சமும் 18 அடி பாதையை முகப்பாக கொண்ட காணிகள் 14 இலட்சம் தொடக்கம் 12 இலட்சம் வரையும் உள்ளது.
- **பார்வையிடும் நேரம் :**
  காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை

தொடர்புகளுக்கு :- ஜெயம்

(15130)

**077 814 7389, 077 986 5457**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்ப அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைக்க புதிய கட்சி ஆரம்பிக்கிறார் சம்பிக்க

(கொழும்பு)

அடுத்த மாதம் புதிய அரசியல் கட்சியை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும் என பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

பதுளை பிரதேசத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், குறித்த கட்சிக்கு ஐக்கிய குடியரசு முன்னணி என பெயரிடப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

இதன் போது மேலும் கருத்து தெரிவித்த அவர், "அடுத்த மே மாதம், நாட்டில் புதிய அரசியல் கட்சி ஸ்தாபிக்கப்படும். ஏனெனில் இந்த நாட்டை இந்த திவால் நிலையிலிருந்து காப்பாற்ற தகுதி அடிப்படையிலான அரசியல் இயக்கம் தேவை.

குடும்ப பரம்பரை அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். மேலும், எங்களுக்குத் தேவை இலஞ்சம் கொடுத்து இலங்கையின் விருப்பங்களை வெல்லும் அரசியலை மாற்ற வேண்டும்.

அந்த அரசியல் முற்றுப் பெற்று விட்டது. சோசலிசம் மற்றும் முதலாளித்துவத்திற்கு பதிலாக புதிய நடைமுறைவாதத்தில் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல அரசியல் சித்தாந்தம் வேண்டும். அதை மே மாதம் வெளிக்கொணருவோம் என தெரிவித்தார். (நி)

# இலங்கை போக்குவரத்து சபைக்கு விரைவில் புதிய ஆட்சேர்ப்பு


(கொழும்பு)

இலங்கை போக்குவரத்துச் சபையில் 800 சாரதிகள் மற்றும் 275 நடத்துநர்களை இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.

அதற்கான ஆட்சேர்ப்பு விரைவில் மேற்கொள்ளப்படும் என அதன் தலைவர் லலித் டி அல்விஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கை போக்குவரத்து சபையில் 1,035 சாரதி வெற்றிடங்கள். மேலும், 450 நடத்துநர்களுக்கான பற்றாக்குறை இருப்பதாக குறிப்பிட்ட லலித் டி அல்விஸ் புதிய ஆட்சேர்ப்பு மூலம் வெற்றிடங்களின் எண்ணிக்கை குறையும் என குறிப்பிட்டுள்ளார். (நி)

# கோழி இறைச்சியின் விலை 260 ரூபாவால் அதிகரிப்பு



(கொழும்பு)

சந்தையில் கோழி இறைச்சியின் விலை 260 ரூபாவினால் அதிகரித்துள்ளதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

பண்டிகைக் காலம் காரணமாக கோழி இறைச்சியின் விலை அதிகரித்துள்ளதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, கோழிப்பண்ணை தொழிலாளிகள் ஏற்கனவே நட்டத்தை சந்தித்து வருவதாக கோழிப்பண்ணை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் அஜித் வீரசிங்க தெரிவித்தார். (நி)

# தேங்கிக் கிடக்கும் மரக்கறிகள் விவசாயிகள் பெரும் கவலை

(தம்புள்ள)

பண்டிகைக் காலம் ஆரம்பமாகியுள்ள நிலையில், விவசாயிகள் கொண்டு வரும் மரக்கறிகளை கொள்வனவு செய்ய தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்திற்கு வரும் வியாபாரிகளின் எண்ணிக்கை பெருமளவில் குறைந்துள்ளதால், மரக்கறிகளின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது என வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

வழமையாக ஏப்ரல் மாத தொடக்கத்தில் அதிகளவான மரக்கறிகள் கொள்வனவு செய்யப்படுவதாகவும் பொருளாதார மையத்தில் மரக்கறிகளின் விலைகள் சற்று அதிகமாகவே காணப்படுவதாகவும் வியாபாரிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

யாழ்ப்பாணம் உட்பட நாடளாவிய ரீதியில் அனைத்து பகுதிகளிலிருந்தும் பெருமளவிலான விவசாயிகளால் பயிரிடப்பட்ட மரக்கறிகள் மற்றும் பழவகைகளை நேற்று முன்தினம் தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்திற்கு கொண்டு வரப்பட்டது.

இந்த மரக்கறிகளை மொத்தமாக கொள்வனவு செய்வதற்கு மிகக் குறைந்த எண்ணிக்கையிலான வியாபாரிகள் வருகை தந்துள்ளமையினால் மரக்கறிகளின் விலை வீழ்ச்சியடைந்து விற்பனை செய்யப்படாமல் உள்ளதாக விவசாயிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எவ்வாறாயினும் தமிழ், சிங்களப் புத்தாண்டை இலக்காக கொண்டு பயிரிட்டு அறுவடை செய்யும் மரக்கறிகளுக்கு உரிய விலை கிடைக்காவிடின் தாம் எதிர்காலத்தில் கடும் நெருக்கடியைச் சந்திக்க நேரிடும் என அவர்கள் கவலை தெரிவித்தனர். (நி)

# மரண அறிவித்தல்



## செல்வராசா இளங்கோவன்
### (முன்னாள் சீமெந்து தொழிற்சாலை உத்தியோகத்தர்)

**தோற்றம் : 01.06.1954 மறைவு : 02.04.2023**

மாவை கலட்டி தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் நல்லூர் அரசடியை வதிவிடமாகவும் கொண்ட செல்வராசா இளங்கோவன் அவர்கள் (02.04.2023) நேற்று ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் செல்வராசா - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் இரத்தினசிங்கம் - செல்வபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும் நித்தியானந்தமலர் (விஜயா) அவர்களின் அன்புக் கணவரும் நந்தகோபன், திலக்ஷி, டினேஸ்கோபி, சாந்தகோபி ஆகியோரின் பாசமிகு தந்தையும் அனுசனின் சித்தப்பாவும் சரண்யா, விஜிதரன், தேனுயா, சிந்துஜா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் வசந்தகுமாரி, சந்திரகுமாரி, விஜயகுமாரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சதீசன்(மோகன்)(நோர்வே), றதீசன்(பிரான்ஸ்), ஜெகதீசன் (நோர்வே), செல்லத்துரை காலஞ்சென்ற தியாகராஜா சுகிர்தராணி, செல்வராணி, SMR ஆகியோரின் மைத்துனரும் காயத்திரி (நோர்வே), ஜெனிதா (பிரான்ஸ்), முகுந்தா (நோர்வே) ஆகியோரின் உடன்பிறவா அண்ணனும் மாரிமுத்து, கதிரவேலு, நடேசன், கணேசன், பசுபதி, சரஸ்வதி, மாணிக்கம், சந்திரகுமாரி, ஆறுமுகம், கதிரவேலு, சின்னம்மா, மனோன்மணி ஆகியோரின் பெறாமகனும் பூரணம் செல்வபாக்கியத்தின் மருமகனும் தெய்வீகன், ராகுலன், மயூரன், ஸ்ரியான், நிஸ்யன், திபிசா, றொமிசா, ஜெனிசா, திபிசா, நிஸ்கா, கவில் ஆகியோரின் அன்பு மாமனும் தமீரா, வானுஸ், கரிஸ், தியா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (03.04.2023) 1.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று அன்னார் பிறந்த ஊரான மாவை கலட்டி தெல்லிப்பளையிலுள்ள அவரது இல்லத்தில் 15 நிமிடங்கள் இதய அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பூதவுடல் தகனக் கிரியைக்காக கீரிமலை செம்மண் வாய்க்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தகவல்:
குடும்பத்தினர்

(C-6285)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுப்பர் ஓவரில் நியூஸிலாந்தை வென்றது இலங்கை அணி



ஒக்லாண்டில் நேற்று இடம்பெற்ற சுற்றுலா இலங்கை மற்றும் நியூஸிலாந்து அணிகளுக்கு இடையிலான முதலாவது இருபது- 20 போட்டியில் இலங்கை அணி சுப்பர் ஓவரில் வெற்றி பெற்றுள்ளது.

இந்த போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற நியூஸிலாந்து அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபட தீர்மானித்தது. அதன்படி முதலில் துடுப்பாடிய இலங்கை அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட் இழப்புக்கு 196 ஓட்டங்களை பெற்றது.

196 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலளித்தாடிய நியூஸிலாந்து அணி 20 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 196 ஐப் பெற்றது.

அதன்படி, போட்டி சமநிலையில் முடிவடைந்ததால், வெற்றியாளரை தீர்மானிக்க சுப்பர் ஓவர் நடத்தப்பட்டது.

சுப்பர் ஓவரில் முதலில் துடுப்பாடிய நியூஸிலாந்து அணி 2 விக்கெட்டுகளை இழந்து 8 ஓட்டங்களை பெற்றது.

இந்த ஓவரில் பந்து வீசிய மஹீஷ் தீக்ஷன 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினார்.

9 ஓட்டங்கள் என்ற வெற்றி இழக்கை நோக்கி துடுப்பாட இலங்கை அணி சார்பில் குசல் மெண்டிஸ் மற்றும் சரித் அசலங்க ஆகியோர் களமிறங்கினர். இந்த நிலையில், இலங்கை அணி 3 பந்துகளில் ஓட்ட இலக்கை அடைந்து, இந்த தொடரில் முதல் வெற்றியை பதிவு செய்தது. (நி)

## பிரபல கால்பந்து அணியை விட்டு விலகும் மெஸ்ஸி



ஆர்ஜென்டினா கால்பந்து அணியின் பிரபல வீரரான லியோனல் மெஸ்ஸி மீண்டும் பார்சிலோனா அணிக்கு திரும்புவது உறுதியாகியுள்ளது.


பார்சிலோனா அணியின் தற்போதைய மேலாளரான ஜாவி இது தொடர்பில் குறிப்பிடுகையில், மிக விரைவில் விடு திரும்புங்கள் என மெஸ்ஸியிடம் கேட்டுக் கொண்டதாக தெரிவித்துள்ளார்.

கடந்த 2021 ஓகஸ்ட் மாதம் மெஸ்ஸி PSG அணியில் இணைந்தார். கால்பந்து களத்தில் அறிமுகமானது முதல், நீண்ட காலம் இணைந்திருந்த பார்சிலோனா அணியில் இருந்து வெளியேறி மெஸ்ஸி PSG அணியில் இணைந்தார்.

பொருளாதார ரீதியாக தமது கோரிக்கையை பார்சிலோனா நிர்வாகம் ஏற்க மறுத்ததை அடுத்தே, அந்த கடுமையான முடிவை மெஸ்ஸி எடுத்தார்.

ஆனால், மெஸ்ஸி எப்போது வேண்டுமானாலும் பார்சிலோனா அணிக்கு திரும்பலாம் எனவும் அவரை ஏற்க தாம் காத்திருப்பதாகவும் அந்த அணியின் தலைவர் Joan Laporta தொடர்ந்து கூறி வந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)


## இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் சலீம் காலமானார்



இந்திய முன்னாள் கிரிக்கெட் வீரர் சலீம் துரானி (88) உடல் நலக்குறைவால் காலமானார்.

1960 முதல் 1973 ஆம் ஆண்டு வரையான காலகட்டத்தில், இந்திய அணிக்காக 29 டெஸ்ட் போட்டிகளில் விளையாடிய இவர், 1,202 ஓட்டங்கள், 74 விக்கெட்டுகள் எடுத்துள்ளார். (நி)

# பஞ்சாப் கிங்ஸ் அணி 7 ஓட்டங்களால் வெற்றி



இந்தியன் பிரீமியர் லீக் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் பஞ்சாப் கிங்ஸ் அணி 7 ஓட்டங்களினால் வெற்றியீட்டியது.

போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற கொல்கத்தா அணியின் தலைவர் ஸ்ரேயர் ஐயர் முதலில் பந்துவீச தீர்மானித்தார்.

அதன்படி களம் இறங்கிய பஞ்சாப் அணி 20 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட் இழப்பிற்கு 191 ஓட்டங்களை எடுக்க எதிரணிக்கு 192 ஓட்டங்கள் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய பானுக ராஜபக்ஷ 32 பந்துகளில் 50 ஓட்டங்களைப் பெற்ற அதே வேளை ஷிகர்தவான் 40 ஓட்டங்களையும் சாம்கரன் ஆட்டமிழக்காமல் 26 ஓட்டங்கள்ளையும் எடுத்தனர்.

பதிலுக்கு களம் இறங்கிய கொல்கத்தா அணி சார்பாக ஆரம்ப துடுப்பாட்ட வீரர்கள் [illegible] மழையும் குறுக்கிட்டது.

இதனால் கொல்கத்தா அணிக்கு 16 ஓவர்களில் 154 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் டக்வொர்த் லூயிஸ் கோட்பாட்டின் அடிப்படையில் 16 ஓவர்கள் முடிவில் கொல்கத்தா அணி 146 ஓட்டங்கள் எடுத்தது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடைத்தாள் திருத்தப்பணி தாமதமானதற்கு அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும்

## பல்கலைக்கழக ஆசிரியர் சங்க சம்மேளனம்

(கொழும்பு)

உயர்தரப் பரீட்சை விடைத்தாள்கள் திருத்தும் தாமதமானமைக்கு அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டுமென பல்கலைக்கழக ஆசிரியர் சங்க சம்மேளனம் தெரிவித்துள்ளது.

தமது கோரிக்கைகளுக்கு அரசாங்கம் உரிய தீர்வை வழங்கினால், விடைத்தாள்களை உடனடியாக சரிபார்க்கும் பணியை ஆரம்பிக்க தயார் என அதன் தலைவர் பேராசிரியர் ஷியாம பன்னஹக்க தெரிவித்துள்ளார்.

இந்த உயர்தரப் பரீட்சை விடைத்தாள் திருத்தத்திலிருந்து விலக முடிவு செய்துள்ளோம் என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது.

இந்த வரிக் கொள்கையால் அநீதி இழைக்கப்படும் எங்கள் உறுப்பினர்களுக்கு கொஞ்சம் நிவாரணம் தேவை என்ற அழைப்படையில். இதனுடன் வேறு எந்த கோரிக்கையும் இணைக்கப்படவில்லை.

எனவே, இந்த நிலை தொடர்வதற்கு நாங்கள் பொறுப்பல்ல. எனவே பொறுப்புடன் சொல்கிறோம். அரசு சாதகமான பதில் அளித்தால், எந்த நேரத்திலும் இப்பணியை துவக்க தயாராக உள்ளோம்.

இதற்கு இன்றே தீர்வு கிடைத்தால், நாளை முதல் விடைத்தாள்களை பார்க்க எங்கள் உறுப்பினர்கள் தயாராக உள்ளனர் என அவர் தெரிவித்தார். (நி)

# மீண்டும் அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்ட முன்னாள் ஜனாதிபதியின் இல்லம்

(கொழும்பு)

மறைந்த முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவுக்கு வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ இல்லம் மீண்டும் அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அரசியலமைப்பு ரீதியாக முன்னாள் ஜனாதிபதி ஒரு உத்தியோகபூர்வ இல்லத்தை கொண்டுள்ளார். அவர் இறக்கும்போது, அவரது மனைவிக்கு அந்த உத்தியோகபூர்வ வீட்டை பயன்படுத்த வாய்ப்புள்ளது.

இதன் அடிப்படையில் முன்னாள் ஜனாதிபதியின் மனைவி ஹேமா பிரேமதாஸ குறித்த வீட்டை பெற்றுக் கொண்டார்.

எனினும், ஹேமா பிரேமதாஸ கொழும்பில் உள்ள அந்த உத்தியோகபூர்வ இல்லத்தை ஒருபோதும் பயன்படுத்தியதில்லை என் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அந்த உத்தியோகபூர்வ இல்லத்தை அரசிடம் அவர் ஒப்படைத்துள்ளார். (நி)

# அதிக விலைக்கு மருந்துகளை கொள்ளவனவு செய்ய தயாராகும் அரசு

(கொழும்பு)

அதிக விலைக்கு மருந்துகள் வாங்குவது தொடர்ந்து இடம்பெற்று வருவதாகவும் மேலும் இரண்டு மருந்துகளை அதிக விலைக்கு கொள்வனவு செய்ய அரசு தயாராகி வருவதாகவும் சுகாதார சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்தார்.

7000 ரூபாவுக்கு விற்கப்படும் கான்சிக்ளோவியன் என்ற வைரஸ் தடுப்பு மருந்தை 77,000 ரூபாவுக்கும், 200 ரூபா பெறுமதியான லினோசோலிட் என்ற ஆன்டிபயாடிக் மருந்தை 2200 ரூபாவுக்கும் கொள்வனவு செய்ய முயற்சி நடந்து வருவதாகவும் இது போன்ற செயல்களால் நாடு தேவையற்ற கடனாளியாகி விடும் என்றும் அவர் குறிப்பிட்டார். (நி)

# விவசாயிகளுக்கு 657 மில்லியன் ரூபா இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது-விவசாய அமைச்சர்

(கொழும்பு)

2021 ஆம் ஆண்டு பெரும்போகத்தில் ஏற்பட்ட பயிர்ச் சேதங்களுக்காக விவசாயிகளுக்கு 657 மில்லியன் ரூபாய் நட்டஈடாக வழங்கப்பட்டுள்ளதாக விவசாய மற்றும் கமநல காப்புறுதிச் சபை தெரிவித்துள்ளது.

மேலும், 2021 ஆம் ஆண்டுக்கான சிறுபோக பருவத்தில் பயிர்ச் சேதத்திற்கான இழப்பீடு வழங்கல் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

மேலும் 2021 பெரும்போக பருவத்தில் 25 மாவட்டங்களில் 31,613 விவசாயிகளின் பயிர்கள் சேதம் அடைந்துள்ளதுடன், 42,934 ஏக்கர் பயிர்ச்செய்கை நிலம் சேதமடைந்துள்ளதாகவும் உறுதி செய்யப்பட்டுள்ளது. (நி)

# ஜனாதிபதி தலைமையில் தேசிய புத்தரிசி விழா

(கொழும்பு)



தேசிய புத்தரிசி விழா ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நேற்று அநுராதபுரத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க ஸ்ரீ மஹா போதிக்கு அருகில் இடம்பெற்றது.

மன்னர் காலத்தில் இருந்து நடைபெற்று வரும் இந்த சம்பிரதாயத்திற்கு, நாடு முழுவதிலும் இருந்து ஏராளமான விவசாயிகள் திரண்டு வந்திருந்ததோடு, விவசாயத்தின் மூலம் நாடு தன்னிறைவு பெறவும் விளைநிலங்கள் செழிப்பாக இருக்கவும் சுபீட்சமிக்க பொருளாதாரம் ஏற்படவும் பிரார்த்தனை செய்தனர். (நி)

# சிறு குற்றங்களுடன் தொடர்புடையவர்களுக்கான தண்டனை முறைமையை மாற்ற நடவடிக்கை

## அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ

(கொழும்பு)

சிறிய குற்றங்களுடன் தொடர்புடைய சந்தேக நபர்களை சிறைச்சாலைகளில் தடுத்து வைப்பதற்கு பதிலாக மாற்று நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளதாக நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர், கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

குறித்த சந்தேக நபர்களை ஒரு பாதுகாவலரின் கீழ் வைத்து கண்காணிக்கும் வேலைத்திட்டமொன்று தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டதாக அமைச்சர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார். (நி)

## விமான நிலையத்தில் எரிபொருளை சேமிக்கும் களஞ்சியசாலை அமைக்க தனியார் துறைக்கு அனுமதி

(கொழும்பு)

விமான எரிபொருள் பிரச்சினைக்கு தீர்வு காணபதற்காக 35,000 மெற்றிக் தொன் எரிபொருளை சேமிப்பதற்கான களஞ்சியசாலையை விமான நிலையத்தில் நிறுவுவதற்கு தனியார் துறைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார். (நி)

# இராசிபலன்

03.04.2023
பங்குனி 20, திங்கட்கிழமை
துவாதசி காலை 7.24 மணிவரை
மகம் காலை- 8.16 மணிவரை

சுபநேரம் -12.10-1.40 மணிவரை
இராகுகாலம்-7.40-9.10 மணிவரை
பிரதோச விரதம்

சந்திராஷ்டமம் - அவிட்டம்

வளவன்

**மேஷம்:** சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், வருங்கால நலன் கருதி சேமிக்க முற்படுவீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வழிபாடு ஆனந்தம் தரும்.

**கடகம்:** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும்.

**துலாம்:** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், பயணங்கள் செல்ல போட்ட திட்டங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, ஆடம்பரப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**மகரம்:** எதையும் ஒரு முறைக்குப் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது, உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், கௌரவக் குறைவான சம்பவங்களும் இடம்பெறும் வாய்ப்புண்டு.

**ரிஷபம்:** தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், பணிபுரியும் இடத்தில் பெயரும் புகழும் கிடைக்கும்.

**சிம்மம்:** அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், திடீர் பயணங்கள் வந்து சேரலாம், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், குடும்பப் பொறுப்புக்கள் கூடும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்:** உறவினர்கள் உங்கள் இல்லம் தேடி வரலாம், தொலைபேசித் தகவல்கள் மகிழ்ச்சி தரும், செய்தொழில் மேன்மையுண்டு, செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள்.

**கும்பம்:** குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறும் வாய்ப்புண்டு, தொழில் வாய்ப்புகள் தேடி வரலாம், இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், காரிய அனுகூலமுண்டு.

**மிதுனம்:** பாகப்பிரிவினைகள் சுமுகமாக அமையும், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு.

**கன்னி:** குடும்பத்தில் அனைவரையும் அனுசரித்து செல்வது நல்லது, தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், சயன சுகக் குறைவான நாள்.

**தனுசு:** தொழில் ரீதியாக முக்கிய நபர்களைச் சந்திப்பீர்கள், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, பயணங்கள் கைகூடும்.

**மீனம்:** அலுவலகப் பணிகள் துரிதமாகும், பழைய பாக்கிகளை நயமாகப் பேசி வசூலிப்பீர்கள், நல்லவர்கள் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, கௌரவமான நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமை தவறாமையும் காலம் தவறாமையும் இரண்டு கண்கள்.

# யாழில் முற்றுகையிடப்பட்ட சிறுவர் இல்லம்

## 13 சிறுவர்கள் மீட்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இரு பாலையில் கிறிஸ்தவ சபை ஒன்றினால் அனுமதியின்றி நடத்தப்பட்ட சிறுவர் இல்லம் முற்றுகையிடப்பட்டு 13 சிறுவர்கள் மீட்கப்பட்டுள்ளனர். கோப்பாய் பொலிஸார் மற்றும் சிறுவர் நன்நடத்தை அலுவலர்களினால் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் இரு பாலை பகுதியில் உள்ள கிறிஸ்தவ சபை ஒன்றினால் அனுமதியின்றி சிறுவர் இல்லம் நடத்தப்படுவதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் கோப்பாய் பொலிஸார் மற்றும் சிறு வர் நன்னடத்தை அலுவலகர்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை அங்கு சென்றனர்.

அதன்போது சிறுவர் இல்லத்தில் இருந்த 13 சிறுவர்கள் மீட்கப்பட்டனர். அவர்கள் துன்புறுத்தப்பட்டதாகவும் உரிய வகையில் உணவு வழங்கப்படவில்லை என்றும் விசாரணைகளில் தெரியவந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

மீட்கப்பட்ட சிறுவர்கள் சட்ட மருத்துவ அதிகாரியிடம் முற்படுத்தப்பட்டு மருத்துவ அறிக்கை பெற்றதன் பின்னர் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர். (நி-33)

# இரணைமடு விவசாயிகள்- அமைச்சர் ஜீவன் சந்திப்பு

(முறிகண்டி)

இரணைமடு விவசாயிகளுக்கும் அமைச்சர் ஜீவன் தொண்டமானுக்குமிடையில் சந்திப்பு ஒன்று நேற்று இடம் பெற்றது.

குறித்த சந்திப்பு நேற்று பகல் 12.30 மணியளவில் இரணைமடு விவசாய சம்மேளன மண்டபத்தில் இடம் பெற்றது. இதன்போது, விவசாயிகளால் மகஜர் ஒன்றும் அமைச்சரிடம் கையளிக்கப்பட்டது. (நி-100)





சட்டநாதர் சிவன் தேவஸ்தான மஹோற்சவ நிகழ்வின் இரண்டாவது திருவிழா யா/செங்குந்த இந்துக் கல்லூரி மாணவர்களால் அண்மையில் நடத்தப்பட்டது.

# நயினாதீவு மருத்துவமனையில் புதிய நோயாளர் விடுதி திறப்பு



(யாழ்ப்பாணம்)

நயினாதீவு பிரதேச மருத்துவமனையில் நயினாதீவு விகாராதிபதி நவதகல பதும கீர்த்தி திஸ்ஸ நாயகதேரரின் ஏற்பாட்டில் புதிதாக அமைக்கப்பட்ட ஆண்கள் நோயாளர்கள் தங்கும் விடுதி நேற்று ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து, யாழ் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி த.சத்தியமூர்த்தி தலைமையில் துறைசார் மருத்துவ நிபுணர்கள் கலந்து கொண்ட விசேட மருத்துவ முகாமும் நடைபெற்றது. (நி-33)

# மணிவிழா நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யா/செங்குந்த இந்துக் கல்லூரியில் நீண்டகாலமாக ஆசிரியர்களாகவும் உபஅதிபர்களாகவும் பணியாற்றி ஓய்வு பெற்ற திருமதி. புவனேஸ்வரி கணேசலிங்கம், திருமதி. செல்வராணி இரத்தின சிங்கம் ஆகியோரின் சேவைகளை பாராட்டும் நிகழ்வு இன்று திங்கட் கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு ஆசிரியர் நலன் புரிச் சங்கத் தலைவர் வே. கணேசலிங்கம் தலைமையில் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் இடம்பெறும். (நி)

# யாழ்-இந்திய ரோட்டரிக் கழக அங்கத்தவர்கள் சந்திப்பு

(சாவகச்சேரி)

இந்திய மற்றும் யாழ்ப்பாண மாவட்ட ரோட்டரிக் கழக அங்க த்தவர்கள் சந்திப்பு நிகழ்வு அண்மையில் யாழில் உள்ள தனியார் விருந்தினர் விடுதி ஒன்றில் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் விருந்தினர்களாக இலங்கைக்கான- இந்தியத் தூதரக அதிகாரி ராகேஷ் நட்ராஜ், இந்தியாவின் தமிழ்நாட்டு ரோட்டரிக் கழக ஆளுநர் ரோட்டரியன் பழனி மற்றும் கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் அதிபர் எஸ்.லலீசன் ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர்.


இதன்போது இந்திய மற்றும் யாழ். மாவட்ட ரோட்டரிக் கழகங்களின் தற்கால மற்றும் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பாக ஆராயப்பட்டன.

மேலும் நிகழ்வில் இந்திய ரோட்டரிக் கழக முன்னாள் ஆளுநர் சம்பத் குமார, யாழ்ப்பாணம்,நல்லூர் மற்றும் சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழக அங்கத்தவர்கள் கலந்து கொண்டனர். (நி-30)

## அனுமதிப்பத்திரங்கள் இன்றி

# மணல் ஏற்றிச் சென்ற 5 டிப்பர் சாரதிகள் கைது

## சாவகச்சேரி பொலிஸார் அதிரடி



(சாவகச்சேரி)

உரிய அனுமதிப்பத்திரம் இன்றி மற்றும் அனுமதிப்பத்திரத்திற்கு முரணான வகையில் மணல் ஏற்றிச் சென்ற 5 டிப்பர் வாகனங்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கைதடி-கோப்பாய் வீதி ஊடாக கடற்கரை மணலை ஏற்றிச் சென்ற டிப்பர் வாகனங்களே சாவகச்சேரிப் பொலிஸாரின் சோதனையின் போது அகப்பட்டுள்ளன.

இதன்போது டிப்பர் வாகனங்களை பொலிஸார் கைப்பற்றியதுடன் அதன் சாரதிகளையும் கைது செய்துள்ளனர்.

கைதானவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி-30)

# பயங்கரவாத தடைச்சட்டம் தொடர்பான கருத்தமர்வு



(சாவகச்சேரி)

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தொடர்பாக சமூக ஆர்வலர்களுக்கு தெளிவூட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை யாழ்ப்பாணம் ஞானம்ஸ் விருந்தினர் விடு தியில் இடம்பெற்றது.

சட்டத்திற்கும் மனித உரிமைக்குமான நிலையத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் வள்வாளராக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன் கலந்து கொண்டார்.

இதன்போது பயங்கரவாதத் தடைச்சட்டம் மற்றும் பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் ஆகியவற்றுக்கு இடையிலான வேறுபாடுகள், அதனால் ஏற்படப் போகும் விளைவுகள் தொடர்பாக தெளிவூட்டப்பட்டது.

குறித்த செயலமர்வில் சட்டத்தரணிகள், பல்கலைக்கழக மாணவர்கள், ஆசிரியர்கள், ஊடகவியலாளர்கள், சமூக சேவகர்கள் மற்றும் சட்டத்திற்கும் மனித உரிமைக்குமான நிலைய உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டு பயனடைந்திருந்தனர். (நி-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹோட்டல்களுக்கு ஜனாதிபதி திடீர் விஜயம்

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க காலி, கொக்கல மற்றும் அஹங்கம ஆகிய இடங்களில் பல சுற்றுலா ஹோட்டல்களுக்கு திடீர் கண்காணிப்பு விஜயம் மேற்கொண்டார்.

எவருக்கும் முன்கூட்டியே அறிவிக்காமல் கடந்த வெள்ளிக் கிழமை காலை ஜனாதிபதி திடீரென ஹோட்டல்களுக்கு சென்றுள்ளார்.

அங்கு சென்ற ஜனாதிபதி சுற்றுலா ஹோட்டல் உரிமையாளர்களுடன் கலந்துரையாடல்களில் ஈடுபட்டார். (நி)

# முட்டை விலை குறைந்தால் பேக்கரி பொருட்களின் விலை குறையலாம்

## அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம்

(கொழும்பு)

முட்டை ஒன்றின் விலை 35 ரூபாவாக குறைக்கப்பட்டால் பாண் தவிர்ந்த ஏனைய பேக்கரி பொருட்களின் விலை குறைக்கப்படும் என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகள் கிடைத்துள்ள நிலையில், ஒரு வாரத்திற்குள் முட்டை சந்தையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படும் என நம்பிக்கை வெளியிட்டுள்ளதாக சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

எரிபொருளின் விலை குறைந்தாலும் பேக்கரி பொருட்களின் விலைகளை குறைக்க முடியாது எனவும் அவர் தெரிவித்தார். (நி)


# சேவைநலன் பாராட்டு



திருமதி.
**யோகேஸ்வரி பாலச்சந்திரன்**
(SLTS-I, BA,TRAINED TEACHER(HINDUISM)
சேவை விபரம்
கிளி/புனித பற்றிமா றோ.க.த.க பா -28.09.1988-21.01.1991
கோப்பாய் அரசினர் ஆசிரியர் கலாசாலை -22.01.1991-21.01.1993
யா/நாவற்குழி ம.வி 22.01.1993-31.12.2010
யா/இந்துத்தம்பி ம.வி 01.01.2011-02.02.2011
யா/புனிதசாள்ஸ் ம.வி 03.02.2011-03.04.2023

எமது பாடசாலையில் கடந்த 12 வருடங்களாக சைவசமய பாட ஆசிரியையாக சேவையாற்றி இன்றுடன் சேவையில் இருந்து ஓய்வு பெறும் திருமதி.யோகேஸ்வரி பாலச்சந்திரன் அவர்கள் எல்லா நலன்களும் பெற்று வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

(15095)

ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/புனித சாள்ஸ் ம.வி, யாழ்ப்பாணம்.


# மூன்று நாட்களுக்கு மேல் காய்ச்சல் நீடித்தால் அலட்சியப்படுத்த வேண்டாம்

## இன்புளுவன்சா வைரஸ் குறித்து மருத்துவர் எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கை மக்களிடையே இன்புளுவன்சா ஏ மற்றும் பி ஆகிய இரண்டு நோய்களும் பரவி வருவதாக ரிட்ஜ்வே ஆர்யா சிறுவர் மருத்துவமனையின் நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

கடந்த சில நாட்களாக ரிட்ஜ்வே ஆர்யா சிறுவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள குழந்தைகளிடம் இருந்து நோய் அறிகுறி தெரியவந்துள்ள நிலையில், பிள்ளைகளின் உடல் நிலை குறித்து பெற்றோர்கள் அவதானம் செலுத்துமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இருமல், காய்ச்சல் அல்லது சளி மூன்று நாட்களுக்கு மேல் நீடித்தால் மருத்துவ சிகிச்சை பெற வேண்டும் என்றும் இந்த அறிகுறிகள் தொடர்ந்தால் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை பகல் நேர பராமரிப்பு மையங்களுக்கு அனுப்புவதை தவிர்க்க வேண்டும் என்றும் வைத்தியர் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

இதேவேளை, 2 வயதுக்குட்பட்ட குழந்தைகள், சுவாச நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் 65 வயதுக்கு மேற்பட்டவர்கள் இந்த நோய்க்கு உடனடியாக சிகிச்சை பெற வேண்டும்.

இந்த நோய் அறிகுறிகள் இருப்பவர்கள் முகமூடி அணிவதில் ஆர்வம் காட்டவேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த நோயுடன் கண்களில் இருந்து நீர் வெளியேறினால் அது குறித்து விரிவான விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாக மருத்துவர் தீபால் பெரேரா மேலும் தெரிவித்துள்ளார். (நி)


## பெயர் மாற்ற அறிவித்தல்

மட்டுவில் தெற்கு சாவகச்சேரியை முகவரியாகக் கொண்ட திருமதி.சிவப்பி சின்னத்துரை ஆகிய நான் எனது பெயரினை இன்று முதல் தேவி என பெயர் மாற்றம் செய்கின்றேன். எனவே இனிவரும் காலங்களில் எனது சகல ஆவணங்களிலும் தேவி எனும் பெயரையே பயன்படுத்துவேன்என இலங்கை வாழ். குடியரசின் மக்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

இங்ஙனம்- திருமதி.தேவி சின்னத்துரை.

(15106)



# மணிவிழா நாளில் கால்பதித்த எமது கல்லூரியின் உபஅதிபர்




திருமதி.
**செல்வராணி இரத்தினசிங்கம்**
உபஅதிபர், பழைய மாணவி (Spl.Trd Science, SLTS-I)

ஆசிரிய சேவை விபரம்

| | |
|---|---|
| யா/வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலை | -20.01.1989-04.02.1991 |
| பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை | -05.02.1991-31.12.1992 |
| யா/மண்டை தீவு மகா வித்தியாலயம் | -01.01.1993-31.12.1999 |
| யா/நல்லூர் C.C.T.M.S | -01.01.2000-15.06.2010 |
| யா/செங்குந்த இந்துக் கல்லூரி | -16.06.2010-31.12.2021 |
| உப அதிபர் | |
| யா/செங்குந்த இந்துக் கல்லூரி | -01.01.2022-03.04.2023 |

இன்றுடன் 34 வருட ஆசிரிய சேவையை பூர்த்தி செய்து எமது கல்லூரியில் இருந்து ஓய்வு பெறும் எமது உப அதிபரை அவரது ஓய்வுக் காலம் சிறக்கவும் மேலும் பல நற்பணிகள் ஆற்றிட அவர் பல்லாண்டு காலம் வாழ வேண்டும் என சட்டநாதர் சிவன் துணையுடன் ஆசி கூறி மனமார வாழ்த்துகின்றோம். (15096)

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்,
யா/செங்குந்த இந்துக் கல்லூரி,திருநெல்வேலி.


# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 200 | 140 | 180 | 200 |
| உருளைக்கிழங்கு | 150 | 150 | 150 | 160 |
| பச்சைமிளகாய் | 240 | 200 | 250 | 300 |
| தக்காளி | 140 | 140 | 150 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 180 | 180 | 200 |
| கோவா | 80 | 100 | 100 | 140 |
| கரட் | 100 | 180 | 160 | 240 |
| பூசணி | 60 | 80 | 50 | 60 |
| புடோல் | 150 | 140 | 120 | 160 |
| வாழைக்காய் | 120 | 120 | 100 | 120 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 280 | 300 |
| பெரிய வெங்காயம் | 140 | 140 | 130 | 140 |
| பாகற்காய் | 350 | 400 | 350 | 300 |
| வெண்டக்காய் | 200 | 250 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 120 | 120 |
| பயற்றங்காய் | 250 | 200 | 180 | 250 |
| லீக்ஸ் | 250 | 260 | 280 | 320 |
| பீற்றூட் | 130 | 100 | 160 | 160 |
| கறிமிளகாய் | 300 | 200 | 250 | 250 |
| முருங்கைக்காய் | 1000 | 900 | 700 | 1200 |
| போஞ்சி | 240 | 250 | 250 | 400 |
| கத்தரிதம்புள்ள | 180 | 100 | 100 | 160 |
| கீரை - 1 பிடி | 80 | 100 | 70 | 120 |
| தேசிக்காய் | 350 | 250 | 280 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 110 | 120 | 80-120 |
| இராசவள்ளி | 250 | 300 | 280 | 350 |
| வெங்காயப்பூ | 200 | 140 | 200 | 450 |
| முள்ளங்கி | 50 | 120 | 120 | 160 |
| பொன்னாங்காணி | 80 | 120 | 100 | 50 |
| வல்லாரை | 40 | 140 | 40 | 50 |
| ஈரப்பலா | 100 | 140 | 120 | 120 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 143





தீர்மானித்த பிறகு தயங்குவதென்பது அவனுடைய இயற்கைக்கு விரோதமானது. எனவே, "ஓடு! ஓடு!", "பிடிபிடி!" என்று கூவிக் கொண்டே வந்தியத்தேவனும் தயிர்க்காரப் பெண்ணைத் துரத்திக் கொண்டு ஓடியவர்களைத் தொடர்ந்து தானும் ஓடினான்.

அந்தப் பெண் சற்றுத் தூரம் ஓடி, ஒரு குறுகிய சந்தில் திரும்பினாள். பின் தொடந்து ஓடியவர்கள் அங்கே போய்ப் பார்த்தபோது தயிர்க்காரப் பெண்ணைக் காணவில்லை. மாயமாய் மறைந்து விட்டாள்! துரத்தி வந்த வீரர்களும் அவளைப் பற்றி அப்புறம் கவலைப்படவில்லை திரும்பிவிட்டார்கள். வந்தியத்தேவன் மட்டும் திரும்பவில்லை. அந்தப் பெண் புகுந்து சென்ற சந்து வழியாகவே மேலும் ஓடினான். இன்னும் இரண்டு மூன்று சந்துகள் புகுந்து திரும்பிய பிறகே ஓட்டத்தை நிறுத்தி மெதுவாக நடக்கலுற்றான்.

வேளக்காரப் படை சாதாரணமாகக் கோட்டையிலிருந்து வெளியேறும் நேரம் சூரியஸ்தமன நேரம் அல்லவா? வந்தியத்தேவன் இப்போது புகுந்து சென்ற சந்துகளில் ஏற்கெனவே இருள் சூழ்ந்து விட்டது. இருபுறமும் சில இடங்களில் மதில் சுவராயிருந்தது. சில இடங்களில் செடி கொடிகள் அடர்ந்த வேலியாயிருந்தது.

வந்தியத்தேவன் எங்கும் நிற்காமல் போய்க் கொண்டேயிருந்தான். திசையைப் பற்றி அவன் கவலைப்படவில்லை. பெரிய வீதிகளில் புகாமல் சந்து பொந்துகளின் வழியாகப் புகுந்து போனால் எப்படியும் கோட்டை வெளிச்சுவரை அடைந்தே தீர வேண்டும். கோட்டைச் சுவரை அடைந்த பிறகு என்ன செய்வது என்பதைப் பிறகு தீர்மானித்துக் கொள்ளலாம். யோசித்து யுக்திகள் கண்டுபிடிப்பதற்குத்தான் இரவெல்லாம் நேரம் இருக்கிறதே!

சற்று நேரத்துக்கெல்லாம் நன்றாக இருட்டி விட்டது. அவன் சென்ற பாதை கடைசியில் ஒரு மதில் சுவரில் வந்து முடிந்தது. இருட்டில் நடந்து வந்த வந்தியதேவன் அச்சுவரின் மேல் இலேசாக மோதிக் கொண்டான். சுவர் என்று மட்டும் தெரிந்தது. அது என்ன சுவர், எவ்வளவு உயரமான சுவர் என்பது ஒன்றும் தெரியவில்லை. அநேகமாக அது கோட்டை மதில் சுவராகவே இருக்கலாம்.

அப்படியானால் இங்கேயே உட்கார்ந்து விடுவதுதான் சரி. சிறிது நேரத்துக்கெல்லாம் சந்திரன் உதயம் ஆகும். அப்போது பார்த்துத் தெரிந்து கொள்ளலாம். அதுவரை ஒளிந்திருப்பதற்கு இதைக் காட்டிலும் நல்ல இடம் இருக்க முடியாது. இத்தனை நேரம். சின்னப் பழுவேட்டரையரின் ஆட்கள் திரும்பிப் போய்ச் சொல்லியிருப்பார்கள்.

கோட்டைத் தளபதி தன்னுடைய ஆட்களை நாலாபுறமும் ஏவியிருப்பார். ஒரு வேளை வேளக்காரப் படையுடன் தான் வெளியேறியிருக்கலாம் என்றும் சந்தேகித்திருப்பார். கோட்டைக்கு உள்ளேயும் வெளியிலேயும் தன்னைத் தேடிக் கொண்டிருப்பார்கள். தேடட்டும் தேடட்டும் நன்றாகத் தேடட்டும். அவர்களையெல்லாம் ஏமாற்றி விட்டு, நான் இக்கோட்டையை விட்டுத் தப்பித்துச் செல்லாவிட்டால் நான் வாணர் குலத்தவன் அல்ல! என் பெயரும் வந்தியத்தேவன் அல்ல!

ஆனால் சந்திரன் உதயமாகி நிலா அடிக்கத் தொடங்கி விட்டால் பழுவேட்டரையர் ஆட்களுக்கும் வசதியாகப் போய்விடும். தன்னைத் தேடி இங்கே வந்தாலும் வந்துவிடுவார்கள். வந்தால் வரட்டும்; தாராளமாய் வரட்டும் இந்த அடர்ந்த தோப்புக்குள் ஒளிந்து கொண்டால் யார்தான் தேடிக் கண்டுபிடிக்க முடியும்?

இப்படி எண்ணிக் கொண்டே சுவரின் மீது சாய்ந்து கொண்டு வந்தியத்தேவன் உட்கார்ந்தான். இளம்பிள்ளையாதலாலும் பகலெல்லாம் அலைந்து களைத்திருந்த படியாலும் கண்ணைச் சுழற்றிக் கொண்டு தூக்கம் வந்தது.

(தொடரும்...)




# சிறுவர் அரங்கம்

## முனிவர் காட்டிய வழி

முன்னொரு காலத்தில் நந்திபுரத்தை ஆண்டு வந்த விக்கிரம சேனனுக்கு ஒரு அழகான ஆண் குழந்தை பிறந்தது. அக் குழந்தைக்கு சிம்மசேனன் எனப் பெயரிட்டு சீரும் சிறப்புமாக வளர்த்து வந்தான்.

ஆனால்சிம்ம சேனனோ சிறு வயது முதலே பெரியவர்களையும் தாய் தந்தையரையும் மதிக்காமல் தன் கருத்துப்படி ஆணவத்துடன் வளர்ந்து வந்தான். அவனுக்கு எட்டு வயது நிரம்பியதும் கல்வி மற்றும் அனைத்து கலைகளையும் கற்கும் பொருட்டு குருகுலத்திற்கு அனுப்பி வைத்தார் மன்னர்.

அங்கும் அவன் யார் பேச்சையும் கேட்பதில்லை. குருவையே மதிப்பதில்லை. அவனுக்கு எப்படி புத்தி புகட்டுவது என்ற யோசனையில் இருந்தார் குரு. அந்த குருவிடம் மிருகங்களை வசியம் செய்து, அவர் நினைத்தபடி ஆட்டுவிக்கும் சக்தி இருந்தது. அதை உபயோகித்து



அவனைத் திருத்தவும் ஒரு வழி கண்டுபிடித்தார்.

ஒருநாள் அனைவரும் ஆற்றில் நீராடிக் கொண்டிருந்தபோது இளவரசன் மட்டும் கரையில் அமர்ந்து ஆற்றுக்குள் கல் வீசி விளையாடிக் கொண்டிருந்தான். தூரத்தில் தண்ணீர் அருந்திக் கொண்டிருந்த சிறுத்தையை, தன் வசிய சக்தியால் ஈர்த்து இளவரசனை துரத்தும்படி பணித்தார் குரு.

சிறுத்தை இளவரசனை துரத்த ஆரம்பித்தது. 'அய்யோ!' என்று அலறியபடி அடர்ந்த காட்டிற்குள் ஓடத் தொடங்கினான் இளவரசன்.

அடர்ந்த காட்டினுள் ஓடிய இளவரசன் வெகு தூரம் ஓடிக் களைத்து, ஒரு பெரிய மரத்தில் ஏறி அதன் உச்சிக் கிளையில் அமர்ந்து கொண்டான். துரத்தி வந்த புலி அவனைக் காணாமல் அங்கேயே சுற்றிச் சுற்றி வந்தது.

பசி வயிற்றைக் கிள்ள, பயமும் அசதியும் சேர்ந்து [illegible] விழித்துப் பார்த்தபொழுது சிறுத்தையை காணவில்லை. சூரியன் உச்சியிலிருந்தான். பசி, களைப்பு, பயம், கவலை இவற்றால் கால், கை நடுக்கமுற என்ன செய்வதென்று புரியாமல் விழித்தான் இளவல்.

சிறு வயது முதலே தன்னை நன்றாக வளர்த்த தாய்; தந்தை மற்றும் உறவினர் அனைவரையும் உதாசீனப்படுத்தியதை நினைத்து மிகவும் வருந்தினான். தன்னுடன் பயிலும் அனைத்து மாணவர்களும் குருவிடம் எவ்வளவு பயபக்தியுடன் நடந்து கொள்கிறார்கள்.

நான் மட்டும் ஏன் இப்படி இருக்கிறேன். மற்ற மாணவர்கள் குருவுக்கு செய்யும்பணிவிடைகளையும் நினைத்துக் கொண்டான். அதில் ஒன்றைக்கூட தான் செய்தது இல்லை. அதன்னால் தான் இத்துன்பம் நேர்ந்தது என்று நினைத்து வருந்தினான்.

உடன் அங்கேயே குருவை மனதில் நினைத்து வணங்கினான். குருகுலத்தை சென்று அடைய வழி காட்டும்படி மானசீகமாக குருவிடம் வேண்டிக் கொண்டான். அடுத்த நொடி யானையின் பிளிறல் சப்தம் கேட்டது. கீழே உற்று நோக்கிய இளவரசன் யானை ஒன்று தனியே நடந்து செல்வதை கவனித்தான். யானையின் பின்னே சீரான இடைவெளி விட்டு நரி ஒன்று செல்வதையும் பார்த்தான். யானைகள் தண்ணீர் இருக்கும் இடத்தை கண்டுபிடிக்கும் திறன் பெற்றவை என்று கேள்விப் பட்டிருக்கிறான். யானை தண்ணீருக்காக செல்வதை அறிந்து, அதன் பின்னால் நரியும் தொடர்ந்திருக்கக்கூடும் என்று கிரகித்த இளவரசன் அவைகளுக்கு பின்னால் அவனும் நடக்க ஆரம்பித்தான்.

வெகு நேரத்திற்கு பின் யானை ஒரு ஆற்றங்கரையை அடைந்து நீர் அருந்த தொடங்கியது. ஆற்றைக் கண்டதும் மகிழ்ச்சியடைந்த இளவரசன் ஆற்றின் கரையோரமாக நடந்து குருவின் குடிலை அடைந்தான். குருவின் காலடியில் விழுந்து தன்னை மன்னிக்கும்படி வேண்டிக் கொண்டான்.

நாடாள வேண்டிய மன்னன் தவறான வழியில் செல்வதை தடுக்க, இச்சிறு நாடகம் நடத்த வேண்டி வந்ததை எண்ணிய குரு, அதன் பிறகு அவனுக்கு கற்பிக்க வேண்டிய அனைத்து கலைகளையும் கற்றுக் கொடுத்து ஒரு நல்ல நாளில் மன்னரிடம் அனுப்பி வைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்த வினையும் செய்கின்ற தீவினையும் ஓர் எதிரொலியைக் காட்டாமல் மறைய மாட்டாது.

*கவி.கண்ணதாசன்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஆதிலிங்கம் உடைக்கப்பட்ட கொடுஞ்செயலை நீத்துப் போகச் செய்வதற்கோ...

வவுனியா வெடுக்குநாறிமலையில் இருந்த ஆதிலிங்கம் உடைக்கப்பட்டும் அம்மன், விநாயகர், முருகன், வைரவர் ஆகிய விக்கிரகங்கள் புரட்டி எடுக்கப்பட்டதுமான கொடூரச் செயல் சைவ மக்களின் இதயங்களைக் கருக்கிவிட்டது.

சுவாமி விக்கிரகங்கள் உடைக்கப்பட்டமையால், பேரழிவு வந்து சேரப் போகிறதே என்று சைவ மக்கள் நடுங்கி நிற்கும்வேளையில், அந்தச் சம்பவத்தை நீத்துப்போக வைக்கும் தந்திரோபாயங்களும் நடந்தாவதை நினைக்கும்போது நெஞ்சு பொறுக்கவில்லை.

ஆம், நேற்று முன்தினம் (01) யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் அமைந்துள்ள தந்தை செல்வா கலையரங்கில் கூடிய தமிழ்க் கட்சிகளும் பொது நிறுவனங்களும் ஒரு சில சைவ சமய அமைப்புகளும் சேர்ந்து; தமிழின வரலாற்றுப் பண்பாட்டு அடையாள அழிப்பு மற்றும் மதவழிபாட்டுத் தலங்கள் அழிப்பு என்பதற்கு எதிராக வடக்கு கிழக்கு மாகாணம் தழுவி மாபெரும் போராட்டத்தை முன்னெடுப்பதெனத் தீர்மானித்துள்ளன.

உண்மையில் இந்தத் தீர்மானம் வெடுக்குநாறிமலையில் ஆதிலிங்கம் உடைக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் பொருட்டு மாபெரும் போராட்டத்தை ஏற்பாடு செய்திருக்க வேண்டும்.

ஏனெனில் வெடுக்குநாறி மலையில் ஆதிலிங்கம் உடைக்கப்பட்ட சம்பவம் என்பது சாதாரணமான விடயமல்ல.

இது ஒட்டுமொத்தச் சைவ மக்களையும் அச்சுறுத்துகின்ற செயல்.

தவிர, வரலாற்றுச் சிறப்புமிக்க வெடுக்குநாறிமலையில் உள்ள ஆதிலிங்கத்தை உடைத்ததன் மூலம் ஏனைய சைவ ஆலயங்களுக்கும் இந்த அவலம் ஏற்படும் என்பதான எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எனவே வெடுக்குநாறி மலையில் உள்ள ஆதிலிங்கம் உடைக்கப்பட்டதைக் கண்டித்து மாபெரும் போராட்டத்தை முன்னெடுப்பதன் மூலமே குறித்த விடயத்தை உலக அரங்குக்கு எடுத்துச் செல்ல முடியும்.

இந்த அடிப்படையில் கடந்த மார்ச் 31ஆம் திகதி நல்லை ஆதினத்தில் சைவ சமய அமைப்புகள் கூடி, வெடுக்குநாறி மலையில் நடந்த கொடும் செயலைக் கண்டித்து வடக்கு கிழக்கு முழுவதிலும் பூரண கடையடைப்புப் போராட்டம் நடத்துவதென தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இந்தநிலையில், நேற்று முன்தினம் குறிப்பிட்ட தமிழ் அரசியல் கட்சிகள் மற்றும் பொது அமைப்புகள்; திட்டமிட்ட தமிழ்ப் பண்பாட்டு சிதைவு, கச்சதீவில் புத்தர் சிலை வைத்த விவகாரம் மற்றும் வெடுக்குநாறி மலையில் ஆதிலிங்கம் உடைக்கப்பட்டமை என நீண்டதொரு பட்டியலை முன்வைத்து அதைக் கண்டிக்கும்வகையில் வடக்கு கிழக்கில் மாபெரும் போராட்டத்தை நடத்துவதெனத் தீர்மானித்துள்ளது.

உண்மையில் இந்தத் தீர்மானம் வெடுக்குநாறி மலையில் நடந்த மிக மோசமான செயலை நீத்துப்போகச் செய்யுமேயன்றி அதற்கு எந்த வகையிலும் நிவாரணம் தேடமாட்டாது.

ஆக, தனித்து சைவ சமயத்தவர்கள் ஒரு பெரும் போராட்டத்தை நடத்திவிடக்கூடாது என்ற நோக்கம் இதற்குள் இருக்கிறதோ என்று எண்ணுமளவுக்கு மேற்படி தீர்மானம் அமைந்துள்ளது.

என்ன செய்வது வெடுக்குநாறி மலையில் நடந்த சம்பவம் சைவ சமயத்தை அழிக்கின்ற செயலாக இருந்தபோதிலும் அதனையும் பத்தோடு ஒன்றாக ஆக்குகின்ற இந்தச் சிந்தனையின் பின்னணி என்ன என்பது தான் புரியவில்லை.

# பயங்கரவாத சட்டம் மூலம் அரசாங்கம் தன் இனத்தை தானே அழிக்கிறது

## பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன்

இன்னொரு இனத்தின் மீது என்னத்தை ஏவினார்களோ அதையே தன் இனத்தின் மீது இந்த சிங்கள அரசு செய்கின்றது என பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி தர்மபுரம் பகுதியில் நேற்று இடம்பெற்ற தமிழரசுக் கட்சியின் வட்டார நிர்வாக தெரிவிலும், மக்கள் சந்திப்பிலும் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர்மேலும் தெரிவிக்கையில்,கடந்த ஒரு சில நாட்களாக இலங்கையிலே மீண்டும் ஒரு பயங்கரவாத தடைச்சட்டம் அல்லது திருத்தச்சட்டம் என்ற ஒன்றை கொண்டு வருகின்றார்கள். ஏற்கனவே இருக்கின்ற பயங்கரவாத தடைச் சட்டத்தின் மோசமான சரத்துக்கள் நீக்கப்பட்டு மக்களுக்கு நன்மை தரக்கூடிய வகையில் நியாயமானதாக இருக்கும் என நாம் கருதினோம்.

ஆனால் புதிதாக வருகின்ற பயங்கரவாத திருத்தச்சட்டத்திலே, ஒருவர் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டால் அவர் மரண தண்டனைக்கும் உள்ளாக்கப்படுவார் என்று அதில் தெளிவாக சொல்லப்படுகின்றது.

இப்பொழுதுதான் சிங்கள மக்கள் விழித்துக் கொள்கின்றார்கள்.சிங்கள இளைஞர் சகோதரிகள் அறகலய போராட்டம் ஆரம்பித்து ஓராண்டை நெருங்கியிருக்கின்றார்கள். சிங்கள மக்கள் இந்த நாட்டில் ஒரு கொடூரமான மனிதரை தங்களுடைய அறகலய போராட்டத்தின் ஊடாக அடித்து இந்த நாட்டைவிட்டே கலைத்தார்கள்.

கலைத்த பிற்பாடுதான், இந்த நாடு ஒரு புதிய மாற்றத்துக்குள் வந்தது. இந்த நாட்டுக்கு தற்பொழுது ஒரு ஜனாதிபதி வந்திருக்கின்றார்.

அவர் ஜனாதிபதி ஆகியதும்,மிக மோசமான பயங்கரவாத தடைச் சட்டத்தை கொண்டு வருகின்றார். அந்த சட்டத்தின் ஊடாக யாரும் நிமிர்ந்து பேச முடியாது. நீங்கள் முகநூல்களிலெல்லாம் இனி எழுத முடியாது. வட்ஸ் ஆப் மூலம் படங்களை அனுப்பினால் பிடித்து சென்று மரணதண்டனை விதிப்பார்கள்.

இந்த பயங்கரவாத தடைச்சட்டதிற்குள் மாற்றம் என்று சொல்லிக் கொண்டு, மீண்டும் மக்களை தெருவுக்கு கொண்டு வரும் வேலையை இந்த அரசாங்கம் செய்து கொண்டிருக்கின்றது எனத் தெரிவித்தார். (4-7-100-316)

## பெருந்தொகை பணம் திருட்டு வவு.இளைஞன் கைது

வவுனியாவில் உள்ளவர்த்தக நிலையம் ஒனறில் 12 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் பணம் திருடப்பட்டமை தொடர்பில் 20 வயது இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் நேற்று தெரிவித்துள்ளனர்.

இந்த திருட்டு சம்பவம் இலுப்பையடிப் பகுதியில் உள்ள பிரபல பல்பொருள் விற்பனை நிலையம் ஒன்றிலேயே இடம்பெற்றுள்ளது.

குறித்த நிலையத்தில் வங்கியில் வைப்புச் செய்வதற்காக தயார் செய்து வைக்கப்பட்டிருந்த 12 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் பணம் திருடப்பட்டுள்ளதாக விற்பனை நிலைய உரிமையாளரால் கடந்த புதன் கிழமை வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

விசாரணைகளின் அடிப்படையில் குறித்த வர்த்தக நிலையத்தில் கடமையாற்றி கொழும்பு சென்றிருந்த இளைஞர் ஒருவரை பொலிசார் சூட்சுமமான முறையில் வவுனியாவிற்கு வரவழைத்து வவுனியா பேருந்து நிலையத்தில் வைத்து கைது செய்தனர்.

அவரிடம் மேற் கொள்ளப்பட்ட விசாரணையின் போது குறித்த பணத்தில் 9 இலட்சம் ரூபாய் இளைஞனின் வங்கியில் உள்ள தாகவும், மிகுதி 3 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் செலவு செய்து விட்டதாகவும் தெரிவித்ததாக பொலிஸார் கூறினர்.

குறித்த சம்பவம் தொடர்பில் வவுனியா, நீலியா மோட்டைப் பகுதியைச் சேர்ந்த 20 வயது இளைஞரே கைது செய்யப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளின்பின் குறித்த இளைஞரை நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாகவும் பொலிசார் தெரிவித்தனர். (4)

## நெடுந்தீவில் கடற்படையினரின் தேவைக்காக கச்சதீவில் இருந்து மணல் அகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நெடுந்தீவுப் பகுதியில் வெடியரசன் கோட்டை தொடர்பானசர்ச்சை முடிவதற்குள் மற்றுமொரு சர்ச்சையான விடயம் அம்பலமாகியுள்ளது.

அதாவது, கச்சதீவுப் பகுதியில் உள்ள மண் திட்டுக்களில் இருந்து மணல் அகழப்பட்டு, நெடுந்தீவு சிறிலங்கா கடற்படையினரின் தேவைகளுக்காக அனுப்பிவைக்கப்படுகின்றது என உத்தியோகபூர்வ தகவல் ஒன்று கசிந்துள்ளது. இவ்வாறு கச்சதீவு மண் திட்டுக்களில் அகழப்படும் மணல் கடற்படையின் படகுகளில் நெடுந்தீவிற்கு கொண்டு வரப்படுவதனை அவ்வூர் மக்களும் அவதானித்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

நெடுந்தீவில் சிறிலங்கா கடற்படையினர் அதிகளவில் நிலை கொண்டுள்ளமையால் அவர்களின் கடற்படை முகாமிற்கான கட்டுமானப் பணிக்காகவே கச்சதீவில் இருந்து மணல் அகழ்ந்து எடுத்துவரப்படுவதாகவும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் ரணில் விக்கிரமசிங்க சிறிலங்காவின் ஜனாதிபதியாக பதவியேற்றதையடுத்தே இவ்வாறான செயற்பாடுகள் அதிகரித் துள்ள தாகவும் மக்கள் ஆதங்கம் வெளியிட்டுள்ளனர்.

தற்போது நெடுந்தீவு பகுதியில் தமிழர் புராதனத்தை பறைசாற்றும் வெடியரசன் கோட்டை, பௌத்த மதத்திற்கு உரியதுஎன அடையாளப்படுத்தும் முயற்சியில் தொல்பொருள் திணைக்களம் முனைப்புடன் செயற்பட்டுவரும் நிலையில், தற்போது கச்சதீவில் இருந்து நெடுந்தீவிற்கு மணல் எடுத்து வருவதும் பெரும் பேசு பொருளாகியுள்ளது. (4)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக

நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை யாழ்.பிரதேசத்தில் கே.எம்.கே. கடல்உணவு (பிரைவேட்) லிமிடெட், மூளாய்கப்பூது, தில்லையம்பலம், யாக்காரு நூலகம் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் மகாறம்பைக்குளம் சமயபுரம் ஆகிய பிரதேசங்களிலும் மின் சாரம் தடைப்படும்.

## கலட்டி மெ.மி.த.கவில் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யா/கலட்டி மெ.மி.த.க பாடசாலையின் வருடாந்த செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு இன்று பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை முன்றலில் இடம்பெறும்.

இந் நிகழ்வில் யாழ் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் திருமதி.நளினி அகிலதாஸ் பிரதம விருந்தினராகவும்,

ஞானம் கல்வி அறக்கட்டளையின் நிலைய முகாமையாளர் திருமதி ஹைறலின் ரஜீவன் ரட்ணம் சிறப்பு விருந்தி னராகவும்,

இன்பத்தேன் சுவையக உரிமையாளர் எம்.ரஞ்சன், கலைமகள் ச.ச நிலையத் தலைவர் சி.சின்னராசா, நிலையச் செயலாளர் நா.சுஜீவன் ,பழைய மாணவர் சங்கச் செயலாளர் து.சுதாகர் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### எதிர்ப்பையும் மீறி

# ஐ.நா பாதுகாப்பு சபையின் தலைவர் பதவியை ஏற்றது ரஷ்யா

(ஜெனிவா)

உக்ரைனின் எதிர்ப்பையும் கோபத்தையும் மீறி, ஏப்ரல் மாதத்திற்கான ஐ.நா பாதுகாப்பு சபையின் தலைவர் பதவியை ரஷ்யா ஏற்றுக் கொண்டது.

ஐ.நா பாதுகாப்பு சபையின் 15 உறுப்பு நாடுகளும் சுழற்சி முறையில் ஒவ்வொரு மாதத்திற்கும் தலைமை பதவியை வகிக்கின்றனர்.

அதன் ஒரு பகுதியாக ஏப்ரல் மாதத்திற்கான ஐ.நா பாதுகாப்பு சபையின் தலைமை பதவியை ரஷ்யா ஏற்றுக் கொண்டது.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஆக்கிரமிப்பு மீதான பனிப்போருக்குப் பிறகு மேற்கு நாடுகளுடன் உறவுகள் மிகக் குறைந்த நிலையில் உள்ளன.

இந்நிலையில் ரஷ்யா தலைமைத்துவத்தை பொறுப்பேற்றமையானது சர்வதேச சமூகத்தின் முகத்தில் அறைந்தமைக்கு சமம் என உக்ரைன் வெளிவிவகார அமைச்சர் குற்றம் சாட்டியுள்ளார்.

மேலும் பதவியை துஷ்பிரயோகம் செய்வதற்கான முயற்சியை அனைவரும் ஒன்றிணைத்து முறியடிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இருப்பினும், சபையில் நிரந்தர உறுப்பினரான ரஷ்யாவை தலைமை பதவிக்கு வருவதை தடுக்க முடியாது என்று அமெரிக்கா கூறியுள்ளது. (நி)

## உணவுக்காக குவிந்த மக்கள் கூட்டம்

### நெரிசலில் சிக்கி குழந்தைகள் உட்பட 12 பேர் உயிரிழப்பு



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் கடும் பொருளாதார நெருக்கடி நிலவி வரும் நிலையில், அங்கு விலைவாசி என்பது விண்ணைத் தொடும் அளவுக்கு உச்சத்தில் இருந்து வருகின்றது.

பாகிஸ்தானின் பொருளாதார சீர்குலைவுக்கு கடந்த ஜூலை மாதம் ஏற்பட்ட வரலாறு காணாத வெள்ளம் காரணமாக கூறப்படுகிறது. விளைநிலங்களில் தேங்கிய தண்ணீரை அகற்றும் பணிகள் நடக்கவில்லை என்று கூறுகின்றனர். உணவுப் பொருள் உற்பத்தி மிக மோசமாக பாதிக்கப்படுவதைப் பற்றிக் கவலைப்படாத அரசு நிர்வாகம், மக்களை இன்று உணவுக்காகத் தெருவில் கொண்டு வந்து நிறுத்தி இருக்கிறது.

கோதுமை விளைச்சலை ஊக்குவிக்க, உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்க, வேளாண் தொழிலை மீட்டெடுக்க அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மாறாக உணவுப் பொருள் இறக்குமதியில் அதிக அக்கறை காட்டுகிறது. தற்போது பாகிஸ்தானின் அந்நிய செலாவணிக் கையிருப்பு மிகவும் குறைந்துள்ளது.

தற்போது ரம்ஜான் நோன்பு கடைப்பிடிக்கப் படுவதால் ஏழை மக்களுக்கு இலவசமாக தலா 10 கிலோ கோதுமை மாவு வழங்கப்படுகிறது.

அண்மையில் பெஷாவர் நகரில் இலவச கோதுமை மாவை அதிகாரிகள் விநியோகம் செய்ய லொரியில் எடுத்துச் சென்றனர். அந்த இலவச கோதுமையைப் பெறுவதற்கு நூற்றுக்கணக்கான மக்கள் முண்டியடித்தனர். இதனால் அங்கு நெரிசல் ஏற்பட்டது.

இந்த நிலையில் கராச்சியில் தன்னார்வ தொண்டு நிறுவனம் ஒன்று இலவச கோதுமை பொதுமக்களுக்கு வழங்கியது. இதனை வாங்க பொதுமக்கள் முண்டியடித்தனர். கட்டுக்கடங்காத கூட்டத்தில் குழந்தைகள் உட்பட பலர் மூச்சு திணறி மயங்கி விழுந்தனர்.

இதில் 3 குழந்தைகள் உட்பட 12 பேர் மூச்சு திணறி இறந்தனர் என்று செய்தி வெளியாகி உள்ளது. கடந்த ஒரு வாரத்தில் சுமார் 20 இற்கும் மேற்பட்டோர் உணவு வாங்க சென்று இறந்துள்ளனர் என்று கூறப்படுகிறது. (நி)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2799

**பிரியங்கா**

இந்த உலகத்தில 2 பேரை ரொம்ப நேரம் முறைச்சு பார்க்க முடியாது



முதலாவது சூரியன்
இரண்டாவது மனைவி..

**நிசங்கன்**



மனுசனா பொறந்தா எதையாச்சும் சாதிக்கனும்டா



நல்லவேளை நான் குழந்தையா தான் பொறந்தேன்

**யாமினி**



எல்லாம் சரி, இப்படி மொட்டையா வந்து புகார் கொடுத்தா அதையெல்லாம் ஏத்துக்க மாட்டோம்.
என்ன சார், அநியாயமா இருக்கு.
அப்ப, என் தலையில முடி வளர்ற வரைக்கும் நான் புகாரே கொடுக்க முடியாதா?

**திலக்ஷன்**

காது கிட்ட வந்து முணுமுணுக்காதேடா கெட்ட பழக்கம் என்னன்னு சத்தமா சொல்லு



காபி குடிக்கிறீங்களான்னு அவர் கிட்ட கேட்டுத் தொலைக்க வேணாமாம் வீட்டுல பால் கிடையாதாம் அம்மா சொல்ல சொன்னாங்க

**தர்ஷனா**




கல்யாணம் முடிஞ்ச பிறகு ஏன் எங்கேயும் கூட்டிற்று போக மாட்றீங்க




தேர்தல் முடிஞ்ச அப்புறம் எவனாவது பிரச்சாரத்துக்கு போவானா

**பவனன்**

கல்யாணத்துக்கும் ஜல்லிக்கட்டுக்கும் என்ன ஒரு ஒற்றுமைனா



வளர்த்தவன் எஸ்கேப் ஆகிடுவான்
அடக்க வாறவன் மாட்டிக்குவான்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவற்றை www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## துப்பாக்கி முனை...

பட்டபோது அமளி துமளி நிலவியுள்ளது.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளதுடன் ஒரு வாரகாலமாக இந்த நிலைமை தொடர்ந்தும் இடம் பெற்று வருகிறது.

குறித்த காணிக்குள் நுழைந்த பௌத்த மதகுரு தனது மெய்ப்பாது காவலருடன் சென்றிருந்த வேளையில் பொதுமக்களை மெய்ப்பாதுகாவலன் துப்பாக்கி முனையில் அச்சுறுத்தல் செய்துள்ளார்.

புல்மோட்டை அரிசி மலை விகாரையினைச் சேர்ந்த பௌத்த மதகுருவே இவ்வாறான சண்டித்தன வாய்த் தகராறில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் குச்சவெளி பிரதேச செயலகம் மற்றும் சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகள் இணைந்து தங்களுக்கு நீதியைப் பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுக்கின்றனர். (4-7)

## கைதடி சித்த...

27ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலேயே இதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் படி கல்வி அமைச்சரினால் பீடங்களுக்கான பிரகடன வர்த்தமானி விரைவில் வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கான பணிகளை விரைவு படுத்துமாறு கல்வி அமைச்சின் செயலாளருக்கு அமைச்சரவை அறிவுறுத்தியுள்ளது. (4-7,33)

## இச்சந்தர்ப்பத்தை...

எனவே, ரணிலின் ஆட்சிக் காலத்தில் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வைப் பெற இன, மத, கட்சி பேதமின்றி அனைவரும் ஓரணியில் திரள வேண்டும் என்றும் அவர் அழைப்பு விடுத்தார்.

இந்த அரிய சந்தர்ப்பத்தைத் தவற விட்டால் எந்தக் காலத்திலும் நாம் தீர்வைப் பெற முடியாது என்றும் பிரதமர் சுட்டிக்காட்டினார். (4-7)

## பளையில்...

டுள்ளது.

பளை பெரியபளையில் வசித்து வந்த கணபதிபிள்ளை முருகேசம்பிள்ளை என்பவரே நேற்று முன்தினம் காணாமல் போயுள்ள நிலையில் நேற்று அருகில் உள்ள தோட்டக்காணி ஒன்றில் சடலமாக இனங்காணப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பில் பளை பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-7,316)

## விக்கிரகப்...

வவுனியா வெடுக்குநாறி மலையில் இருந்த அதிலிங்கம் இனந்தெரியாதவர்களால் உடைத்தெறியப்பட்டதுடன் அங்கிருந்த ஏனைய விக்கிரகங்களும் புரட்டி எடுக்கப்பட்டிருந்தன.

இச்சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்த நிலையில், மீளவும் அதேயிடத்தில் லிங்கத்தையும் ஏனைய விக்கிரகங்களையும் பிரதிஷ்டை செய்வதெனத் தீர்மானிக்கப்பட்டது.

ஆலய அறங்காவலர்களின் தீர்மானத்தின்படி நேற்று முன்தினம் (01) சனிக்கிழமை விக்கிரகங்களைப் பிரதிஷ்டை செய்வதாக இருந்தபோதிலும் அந்நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அமைச்சர் ஜீவன் தொண்டமான் ஆகியோர் கலந்து கொள்ள வருவதாகவும் எனவே நேற்று (02) ஞாயிற்றுக்கிழமை விக்கிரகங்களைப் பிரதிஷ்டை செய்யுமாறும் கூறப்பட்டது.

இதன் அடிப்படையில் சனிக்கிழமை விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்படாமல் ஞாயிற்றுக்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இந்நிலையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் அமைச்சர் ஜீவன் தொண்டமான் ஆகியோர் நேற்று வெடுக்குநாறி மலைக்கு சென்றனர்.

அமைச்சர்கள் வந்ததும் விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

அதனைப் பார்ப்பதற்காகப் பக்தர்கள் கூடியிருந்தனர்.

இந்நேரத்தில் விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்வதற்காக வெடுக்குநாறி மலைக்கு சென்றிருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் அமைச்சர் ஜீவன் தொண்டமான் ஆகியோர் விக்கிரகங்களைப் பிரதிஷ்டை செய்ய வேண்டாமெனவும் மேற்படி ஆலயம் தொடர்பில் நீதிமன்றில் வழக்கு இருப்பதாகவும் எனவே நீதிமன்றத் தீர்ப்பு வந்தபின்பு நடவடிக்கை எடுக்கலாமெனவும் அதிரடியாகக் கூறிவிட்டு அங்கிருந்து புறப்பட்டுச் சென்றனர்.

இதேவேளை அங்கு சென்ற அமைச்சர்கள் இருவரும் ஆலயத்தையோ அன்றி உடைக்கப்பட்ட ஆதிலிங்கத்தையோ பார்வையிடவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. (4)

## கிளிநொச்சியில்...

கத்தில் முறிந்து மரங்கள் சரிந்துள்ளதுடன், பாடசாலையின் தற்காலிக கொட்டகைகளும் காற்றினால் தூக்கி வீசப்பட்டுள்ளது.

இதனால் வகுப்பறை கற்றல் செயற்பாடுகள் பாதிப்படைந்துள்ளது. இதேவேளை குறித்த பாடசாலைக்கு முன்பாகவிருந்த முதிர்ச்சியடைந்த மரம் ஒன்றின் கிளை முறிந்து விழுந்ததில் அவ்வீதியூடான போக்குவரத்து பாதிக்கப்பட்டது. (4-7,100,316)

## கட்டாய...

சிறுமிகளுக்கு தேவையின்றி விற்றமின் சி மற்றும் டி மாத்திரைகள் வழங்கப்பட்டுள்ளன என்று கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் இருபாலை பகுதியில் உள்ள கிறிஸ்தவ சபையினால் அனுமதியின்றி சிறுவர் இல்லம் நடத்தப்படுவதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் கோப்பாய் பொலிஸார் மற்றும் சிறுவர் நன்னடத்தை அலுவலகர்கள் நேற்று முற்பகல் அங்கு சென்றனர்.

அதன்போது 13 சிறுமிகள் மீட்கப்பட்டனர். அவர்கள் துன்புறுத்தப்பட்டதாகவும் உரிய வகையில் உணவு வழங்கப்படவில்லை என்றும் விசாரணைகளில் தெரியவந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

“பெற்றோரால் கைவிடப்பட்டவர்கள் மற்றும் சேர்க்கப்பட்டவர்களே குறித்த 13 சிறுமிகளும். அவர்கள் கட்டாய மதமாற்றத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அவர்கள் நாய்களுடன் விளையாட வேண்டும் என்ற நிர்ப்பந்தத்துக்கும் உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

சிறுமிகள் துன்புறுத்தலுக்கு உட்படுத்தப்பட்டமைக்கான அடையாளங்கள் கண்டறியப்பட்டுள்ளன. தம்மை வேறு சிறுவர் இல்லங்களில் சேர்க்குமாறு கோரியுள்ளனர்” என்றுவிசாரணைகளில் தெரிவிக்கப்பட்டது. (4-7,33)

(... ஆம் பக்கத்தில்)

## ஜனாதிபதி ரணில்...

டெல்லிக்கு விஜயம் செய்வதற்கான பிரதமர் நரேந்திர மோடியின் அழைப்பிதழை இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்ஜெய்சங்கர் அண்மைய இலங்கை விஜயத்தின் போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளித்திருந்தார்.

டெல்லியில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட ஊடாகவும் இந்த இருதரப்பு சந்திப்புக்கு முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டது.

இதன் போது பிரதமர் மோடியுடன் இடம்பெறவுள்ள கலந்துரையாடல்களில் மாகாண சபை தேர்தலுக்கான திகதி மற்றும் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கும் திட்டங்கள் குறித்தும் அறிவிக்க உள்ளதாக அரசாங்கத்தின் முக்கியஸ்தர் ஒருவர் குறிப்பிட்டார். (4-7)

## வெடுக்குநாறி...

தெரிவித்திருந்தனர்.

இதனால் பொதுமக்கள் மற்றும் ஆலய நிர்வாகத்தினர் பெரிதும் ஏமாற்றமடைந்தனர்.

இந்நிலையில் வெடுக்குநாறி மலைப் பகுதியில் பெருமளவு படையினர் குவிக்கப்பட்டு அப்பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது என தகவல் வெளியாகியுள்ளது. (4)


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 02/04/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1533
வெற்றி இலக்கங்கள்
சிம்மம் 2 9 6 6 7 0
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.04.02
சீட்டிழுப்பு இலக்கம் - 1108
Q 04 05 24 66

கொவிசெத
திகதி 2023.04.02
சீட்டிழுப்பு இலக்கம் 3320
Q 09 24 28 41
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 02/04/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1426
B 12 07 14 60 72

HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2023.04.02
சீட்டிழுப்பு இலக்கம் 387
கும்பம் 12 40 41 54 கும்பம்

மஹஜன சம்பத
திகதி 2023/04/02
சீட்டிழுப்பு இலக்கம் 5078
E 3 1 1 4 3 5
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2053
நிறம் செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2023.04.02
தினம் ஞாயிற்றுக்கிழமை
D 18 30 45 57
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 4,073,820/-
DLB

ஞாயிற்றுக்கிழமை
சனிதா
சீட்டிழுப்பு திகதி : 2023.04.02
சீட்டிழுப்பு இல : 4214
வர்ணம் : இளஞ்சிவப்பு
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,758,300/-
வெற்றி இலக்கங்கள் 12 35 37 51 G
DLB

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 308
சீட்டிழுப்பு திகதி 2023.04.02
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 15 44 47
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,422,920/-
DLB

ராசி
சுப்பர் ஜக்பொட் பரிசு வெல்லப்பட்டுள்ளது ரூ. 3,064,026.40
திகதி 2023-04-02
வெற்றி வாரம் 3765
வெற்றி இலக்கங்கள் 15 29 50 58
வர்ணம் ஊதா
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 11,703,106.40
DLB

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
H 23 14 34 55 62
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 1229
வர்ணம் மஞ்சள்
திகதி 2023.04.02 ஞாயிற்றுக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 318,572,120.20
DLB
தொலைபேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk

அத கோடிபதி
ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1879
வர்ணம் : இளம் பச்சை
சீட்டிழுப்பு திகதி : 2023.04.02
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,875,160/-
வெற்றி இலக்கங்கள் 17 35 51 68 Z
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (15083)

**076 825 7716** (ஆகாஸ்)



## காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் 66 பரப்புக் காணி (நிலப்பரப்பு) மட்டுவில் காபற் வீதியிலிருந்து இரண்டாவது காணி.

- 1 பரப்பின் விலை 150,000/-
- 3 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- பருத்தித்துறை வீதி, புத்தூர்ச் சந்தியிலிருந்து 1½ km தூரம்.

(15126)

**076 755 8606, 077 638 5683**



**நீங்கள் கடுமையான இருமல், சளி மற்றும் இளைப்பினால் அவதிப்படுகின்றீர்களா?**

**இன்றே பாவியுங்கள்.**

**சித்தாரா துளசி அசமோதகம் பாணி**

ஆதிகால தேசிய ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இந்த அற்புத பாணி நுரையீரல், சுவாச நாளங்களில் இருக்கும் சளியைப் போக்குவதுடன் இருமல், சளி, இளைப்பு, வாய்வு, அஜீரணம் போன்ற நோய்களிற்கு உடன் நிவாரணம் வழங்கும்.

யாழ். குடா நாட்டின் அனைத்து பார்மசிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA SIDDHAYURVEDA PHARMACY.

சந்தைப்படுத்துவோர் :
சிவா நறுமணப் பூங்கா ®
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பேசி : 021 222 2567
(குறிப்பு : சத்திரச்சந்திக்கு அண்மையில்)

(C-6279)



## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 78 பரப்பு காணி விற்பனைக்குண்டு (நிலப்பரப்பு)**

- யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியிலிருந்து (காப்பெற் வீதி) 100m தூரத்தில்.
- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- நன்னீரூற்று நிலம்
- ஒரு பரப்பின் விலை 200.000/-
- விவசாயம் செய்வதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த இடம்
- பருத்தித்துறை வீதியிலிருந்து 1 Km தூரம்
- சோமஸ்கந்தா கல்லூரியிலிருந்து 1 Km தூரம்
- பார்வையிடும் நேரம் : காலை 6 மணியிலிருந்து மாலை 6 மணி வரை

(15126)

**076 733 6047**
**076 333 6079**
**076 733 6093**



## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கைதடி வழிப் பிள்ளையார் ஆலயத்திற்கு அருகாமையில் 04 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.**

⇨ A9 வீதியிலிருந்து இரண்டாவது காணி
⇨ 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
⇨ கைதடி சந்தியிலிருந்து 500m தூரம்
⇨ A9 வீதியிலிருந்து 50m தூரத்தில் காணி உள்ளது.

(15126)

**076 436 5814**
**076 739 0413**


# மரண அறிவித்தல்

தோற்றம்
10 - 10 - 1938



மறைவு
26 - 03 - 2023

## திருமதி இரத்தினம் நடராஜா (அனலைதீவு)

அனலைதீவு 2 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்ட இரத்தினம் நடராஜா அவர்கள் (26.03.2023) ஞாயிற்றுக்கிழமை அன்று லண்டனில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்தியநாதன் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வைத்தியநாதர் - பொன்னம்மா தம்பதியரின் ஆருயிர் மருமகளும் காலஞ்சென்ற நடராஜா அவர்களின் அருமை மனைவியும் சாரதாதேவி (இலங்கை), காலஞ்சென்ற உதயகுமாரன் (சுவிஸ்), விஜயகுமாரன் (லண்டன்), விஜயகுமாரி (இலங்கை), கர்ணகுமாரன் (இலங்கை), தர்மபாலன்(லண்டன்), விஜயராணி (லண்டன்), காலஞ்சென்ற உருத்திரதேவன் (இலங்கை), தர்மராஜா (இலங்கை) ஆகியோரின் அன்புத் தாயாரும் தங்கவேல் (இலங்கை), ஜெயந்தி (சுவிஸ்), சித்திரா (லண்டன்), நாகசிவனேஸ்வரி (இலங்கை), வளர்மதி (லண்டன்), சந்திரகாந்தன் (லண்டன்), வசந்தி (இலங்கை) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் காலஞ்சென்றவர்களான நடராஜா (இலங்கை), திருநாவுக்கரசு (இலங்கை), தர்மராஜா (பிரான்ஸ்) மற்றும் பார்வதி (சுவிஸ்), கணேஸ் (இலங்கை), சண்முகநாதன் (பிரான்ஸ்), சுபத்திராதேவி (இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம், கமலாதேவி, நிறைஞ்சலா, விசாலாட்சி, பழனி மற்றும் நாகேஸ்வரி, கோமதி, சாந்தி, சந்திரன் ஆகியோரின் மைத்துனியும் ஸ்ரீதரன், ஸ்ரீமதி, லோகேஸ்வரி, கபிலன், நிரோசினி, யசிந்தா, வபித்தா, நிவீற்ரா, விதுசன், சுதர்சனா, சுஜந்தன், சுரேகா, சுஜந்தி, ஜனனி, கிதுர்ஷன், தனுஷன், அனுசிகா, சஞ்சீத், ரணீலா, மிலேனி, மௌலிகன், வஜிதா, யதுரசன், கோமேசன், தயாபரன், சனுயா, மரீனா, சுஜந்தன், மகுநன், சங்கர், கிரி, வசந்த், தேவதர்மலா, கிருத்திகன், லஷ்மி, நிசாந்தன், ரஷி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் றித்தி, அபி, அஸ்மிகா, ஆதிஷனன், நேஜன், சிறாயா, சேய்டன், டியா, காந்தன், உயானி, யதுசிகா, தருனிகா, சஜீவ், சுஜானி, மிதுன், தக்சாலினி, யஸ்வான், அட்சரா ஆகியோரின் ஆருயிர்ப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 05.04.2023 நாளைமறுதினம் புதன்கிழமை லண்டனில் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.40, அம்பகர் வீதி,
பிரம்படி, கொக்குவில்.

(15125)

தகவல் :
பிள்ளைகள்


## உடனடி வேலை வாய்ப்பு

**நிர்வாக உத்தியோகத்தர்**



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

**V2 TRAVELS**

வயது கிளைகள்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி
- நெல்லியடி
- திருகோணமலை
- கோப்பாய்
- பண்டத்தரிப்பு
- கொழும்பு
- சுன்னாகம்
- மானிப்பாய்
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- புத்தூர்
- சங்கானை

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

(C-6284)



## உடனடி வேலை வாய்ப்புக்கள்

**EXECUTIVE OFFICER**



✓ சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/= (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
✓ வயது-22 தொடக்கம் 35
✓ தகுதி- பட்டதாரிகள் (ஆங்கில அறிவு அவசியமானது)

(C-6284)

**V2 TRAVELS**

AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம்
0777-068-777



NOBLE PAPERS



# Joint Our Team...

**Noble international Papers Lanka (Pvt) Ltd** is a paper manufacturing company which is operating at Industrial Estate Atchuvely, Jaffna. Noble is currently manufacturing Verity packing papers. To develop our working team Noble is looking for the following vacancy....

## Management Trainee

Responsible to ensure the completeness of accounting transactions and record keeping

- Basic knowledge in accounting and book keeping.
- Fair knowledge in English in writing and speak.
- Basic Knowledge in inventory management.

## Qualifications

- Bachelor degree in accounting, Finance or Marketing.
- AAT Qualified.
- HNDA Qualified.

The remuneration package for the above position is very competitive and the rewards are performance driven.

If you thing you have what it takes to be success in this challenging roll please apply within 7 days from this publication by email to **nnobleipl@gmail.com** or by post to **Human Resource Department, Noble international Papers Lanka (Pvt) Ltd, Industrial Estate, Achuvely, Jaffna.**

(15086)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.04.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org